



யாழ்ப்பாணம் மாதகலைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகக்
கொண்டவரும் டென்மார்க்கில் வசித்து வந்தவருமாகிய

அமரர்

# திருமதி.ஞானாம்பாள் வேலுப்பிள்ளை

அவர்களின் 31ஆம் நாள் நினைவை சுமந்துவரும்

# நினைவுமலர்

11.01.2013

*தாய்மைக்கு உதாரணமாய் தரணிமிசை வந்துதித்து*
*பெண்ணிற்கு பெருந்தக்க யாவுற என்பதற்கு உதாரணமாக*
*வாழ்ந்து இன்று தெய்வத்துள் வைக்கப்பட்டிருக்கும் அன்புதாய்*

*அமரர்*

# திருமதி. ஞானாம்பாள் வேலுப்பிள்ளை

*அவர்களின்*

*வாழ்வியல் வசந்தத்தை சுமந்து வரும்*

# நினைவு மலர்



**தாய்மைக்கு உதாரணமாய் தரணிமிசை வந்துதித்து**
**தூய்மைநிறை வாழ்வுதனை துலங்கிடவே வாழ்ந்திட்டு**
**சேய்மை நிலை அடைந்திருந்த செகம்தனையே விட்டகன்ற**
**மாய்ந்திடாப் புகழுடையார் அன்னை ஞானாம்பாளை**
**நினைவு கூர்வோம்!**



# சமர்ப்பணம்



மாதருள் மாணிக்கமாய், பண்பின்

பேரொளியாய், அன்பின் பிறப்பிடமாய்,

தியானத்தின் உறைவிடமாய், புன்னகை

பூத்த உள்ளமாய், அன்புடன்

அரவணைத்து பேணி காத்து, கல்வி தந்து

எமையெல்லாம் வழிநடத்தி, இன்னல்

களைந்து மங்காத குடும்பத்தின் ஒளிவிளக்காய்

திகழ்ந்து வாழவைத்த தெய்வம் ஞானாம்பாள்

அம்மா இன்று தெய்வமாகிவிட்டா.....

எம் அன்புத் தெய்வம் அம்மாவிற்கு

இம்மலரினை காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.

**ஓம் சாந்தி ....**

**- குடும்பத்தினர் -**

# 31ஆம் நாள் நினைவுடன்...



தோற்றம் 27 07 1930

மறைவு 12 12 2012

## அமரர்
# திருமதி.ஞானாம்பாள் வேலுப்பிள்ளை
அவர்களின்

## திதி வெண்பா

நலமெங்கும் நந்தனவாண்டு கார்த்திகை மாதத்தில்
பூண்டதொரு அபரபக்க சதுர்த்தசி நீண்ட புகழ்
மாதகலூர் ஞானாம்பாள் வேலுப்பிள்ளை
பெயரால் வீரபத்திரர் மலரடி சேர்ந்தாரே

## எங்களுக்குள் ஏதோ ஒன்று இருப்பது போல இந்த மலருள்ளும் ஏதோ ஒன்று உண்டு அதை முகர்ந்து பார்ப்போம்!

உடலினால் நாங்கள் எல்லோரும் வேறுபட்டு இருந்தாலும் ஆத்மீகத்தால் நாங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு இருக்கின்றோம். ஆத்மா என்பது இறைவனின் சிருஸ்டிப்பாகும். அதனால் அந்த இறைவனால் சிருஸ்டிக்கப்பட்ட ஆத்மாக்களெல்லாம் ஏதோ ஒரு வகையிலே ஒன்றிற்கொன்று தொடர்புடயவைகளாகவே இருக்கின்றன. உடல் என்பது எங்களுக்கு எங்களுடைய தாய் தந்தையர்களால் தரப்பட்டவையாகும். தாய் தந்தையர்களால் எங்களுக்கு தரப்பட்ட உடலுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவத்தை நாங்கள் இறைவனால் தரப்பட்ட ஆத்மாக்களிற்கு கொடுப்பதில்லை. ஏனென்றால் உடல் கண்ணிற்கு தெரிகின்றது. ஆத்மாக்கள் கண்களிற்கு தெரிவதில்லை. அவ்வாறு தாய் தந்தையர்களால் தரப்பட்ட உடலுக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்தும் இறைவனால் தரப்பட்ட ஆத்மாவிற்கு முக்கியத்துவத்தைக் கொடுக்காமலும் நாம் வாழ்கின்ற வாழ்க்கை முறையே கிடைத்தற்கரிய மகோன்னதமான மானிடப்பிறப்பின் இன்றைய தாழ்வு நிலைக்கு காரணமாகி விடுகின்றது. உருவவடிவிலே இருக்கின்ற மலர்களை நேசிக்கின்ற நாங்கள் அருவ வடிவிலே அந்த மலர்களின் வாசத்தையும் நேசிக்கின்றோம் அல்லவா அதேபோலவே மானிட வடிவின் உடல்களை நேசிக்கின்ற நாங்கள் அந்த உடல்களினுள்ளே புதைந்துகிடக்கின்ற அருவ வடிவமான ஆத்மாக்களையும் நேசிக்கவேண்டும். அதுவே நாங்கள் இறைவனை நேசிப்பதற்கு சானமாகும். அந்தவகையிலே அருமையான அந்த உருவ வடிவம் மறைந்து போக இறைவனுக்கு சமானமான அருவ வடிவிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற அன்னை திருமதி.ஞானாம்பாள் வேலுப்பிள்ளை அவர்களின் வாசமே இந்த மலருள்ளும் வீசிக்கொண்டிருக்கின்றது. வாருங்கள் அதை நாங்கள் முகர்ந்து பார்ப்போம்.

(ஆத்மீகத்தால் ஆத்மாக்களை அறிந்து கொள்ளும் வழியினைத் தெரிந்து கொண்டில் ஆத்மாக்கள் இறைவனை அறியும் வழியும் தானாகவே திறந்து கொள்ளும்)

உ
சிவமயம்

# அமரர் திருமதி.ஞானாம்பாள் வேலுப்பிள்ளை
# அவர்களின்
## ஆத்ம ஈடேற்றத்திற்காக இறைவனை நோக்கி
## பஞ்சபுராணம் ஓதுவோமாக



திருச்சிற்றம்பலம்

### விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானே
காதலால் கூப்புவர் தம்கை

## தேவாரம்

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறை ஓதும் எங்கள் பரமன்
நதியோடு கொன்றை மாலை முடிமேல் அணிந்து
என உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடு நோய்கள் ஆனபலவும்
அதி குணம் நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்ஃகு மிகவே

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதித்துன் விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்தக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றி என்றுஞ்
கைதான் நெகிழவிடேன் உடையா யென்னைக் கண்டுகொள்ளே

## திருவிசைப்பா

ஏகநாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல் வன்னற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா யூர்ந்த
மேக நாயகனை மிகு திருவீழி மிழலை
விண்ணழி செழுங் கோயில்
கோய நாயகனையன்றி மற்றொன்றும்
உணர்கிலேன் யானே

## திருப்பல்லாண்டு

மண்ணுக தில்லை வளர்க நம்பக்தர்கள்
வஞ்சகர் போய் அகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
பவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமை கோனடி
யோமுக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறி தந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போது உன்
அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

தான தனந்தன தான தனந்தன
தான தனந்தன தனதான

ஈளை சுரங்குளிர் வாதம் எனம்பல
நோய்கள் வளைந்தற இளையாதே
ஈடு படுஞ்சிறு கூடு புகுந்திடு
காடு பயின்றுயிர் இழவாதே

மூளை எலும்புகள் நாடி நரம்புகள்
வேறு படுந்தழல் முழுகாதே
மூலம் எனும் சிவ யோக பதந்தனில்
வாழ்வு பெறும்படி மொழிவாயே
வாளை நெருங்கிய வாவியி லுங்கயல்
சேல்கள் மறிந்திட வலைபீறா
வாகை துதைந்தணி கேதகை மங்கிட
மோதி வெகுண்டிள மதிதோயும்
பாளை நறுங்கமழ் பூக வனந்தலை
சாடி நெடுங்கடல் கழிபாயும்
பாகை வளம்பதி மெவி வளஞ்செறி
தோகை விரும்பிய பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்.



## சுமார் எண்பத்தி இரண்டு ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து விட்ட

# அன்னை திருமதி.ஞானாம்பாள் வேலுப்பிள்ளை

## அவர்களின் வாழ்வியல் சுருக்கம்

*எண்பத்தி இரண்டாண்டு இவ்வுலகில் வாழ்ந்திருந்து*
*பண்புக்கு இலக்கணங்கள் பலவிங்கு வகுத்துவிட்டு*
*துன்பத்தில் நாம் துவழ தூவெண்மதியோனை அடைந்திட்ட*
*அன்புள்ள அன்னை திருமதி ஞானாம்பாள் "இவரேயாம்"*

இந்து மா கடலில் முத்தென விளங்கும் ஈழநாடு வரலாற்று காலம் தொடக்கம் பெயர் பெற்று விளங்கியது. இராமாயாண காலத்துடன் இராவணேஸ்வரன் தொடர்புபடுத்தப்படுகிறான். பண்டைய காலம் தொடக்கம் தமிழர் வாழ்ந்த பூமி இதனை கண்டெடுக்கப்பட்ட தொல் பொருள் சான்றுகள் விளங்கி நிற்கின்றன.

இத்தகைய சிறப்பு மிக்க நாட்டின் வடபால் யாழ்ப்பாணம் அமைந்துள்ளது. இதன் வடமேற்கில் மாதகல் பதி மேன்மையுற்று விளங்குகிறது. இப்பதியின் நுழைவாயிலில் வரலாற்று புகழ்பெற்ற கண்ணகையாக அமர்ந்து அருள்பாலித்த காலத்தில் அந்நியர் போர்த்துக்கேயரால் மறைக்கப்பட்ட போதும் மீண்டும் புவனேஸ்வரி அம்மாள் சந்நிதானமாக பெருமையுடன் பேராட்சி புரிகின்றாள். மாதகல் நுணைசம் பதியில் கருணைக் கந்தனாக காததூரம் சென்றாலும் காவடி தூக்குவதற்காக சித்திரைக்கு வந்து சிங்கார வேலனுக்கு காவடி எடுக்கும் அடியாருக்கு மாதகல் நுணசை முருகப்பெருமான் அடியார் வேண்டும் வரத்தை அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார். சித்தி எல்லாம் விளங்கும் மாதகல் அரசடி சித்தி விநாயகர் ஊரில் மத்தியில் அமர்ந்து அருட்காட்சி புரிகின்றார்.

மாதகலில் பல சிவ வழிபாட்டிடங்கள் மக்களால் போற்றப் படுகின்றன. மாதகல் சம்பில் துறையில் எழுந்தருளிய சம்புகேஸ்வரம் வரலாற்று ஆரம்பம் முதல் சிறப்பு பெற்றது. இது கடலால்

கொள்ளப்பட்டது என்பர். இன்று அதே இடத்தில் சிவ ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. அடுத்து மாதகல் கூடல் விளாத்தி சந்திர மௌலீஸ்வரர் ஆலயம். மூன்றாவது மாதகல் வவுனை வீரபத்திரர் ஆலயம். இவ்வாலயம் காலஞ் சென்ற ஞானாம்பாளின் தந்தையார் சிதம்பரப்பிள்ளையின் குல தெய்வமாக போற்றப்பட்டதாகும். இன்று சிவாலயம் நித்திய பூசை வழிபாடுகளுடனும் மணிக்கூட்டுக் கோபுரம், மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், தம்ப மண்டபம், சுற்றுக் கொட்டகைகள் அமையப் பெற்று ஊரின் நவீனத்துவ கோயிலாக மிளிர்கின்றது. இங்குள்ள காண்டாமணியின் ஓசை ஊர் மக்கள் எல்லோரையும் துயில் எழுப்பும் நாதமாக ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

இவ்வகையான சிறப்புக்களுடன் விளங்கும் மாதகல் என்றழைக்கப்படும் அழகிய கிராமத்தில் சைவவேளாளர் குலத்தின் இலக்கணமாய் திகழ்ந்த தம்பதியினர் சிதம்பரப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளைக்கும் சிரேஸ்ர புத்திரியாக 27.07.1930 அன்று ஞானாம்பாள் இவ்வுலகிற்கு வந்துதித்தார். பாக்கியவாள் முத்துப் போன்ற ஆறு சகோதர சகோதரிகளான; தனலட்சுமி, இரத்தினம், தில்லைநடராசா, காசிராசா, தங்கமுத்து, விக்கினேஸ்வரனுடன் பிறந்து அக்கா என்று எல்லோராலும் இனிமையுடன் அழைக்கப் பட்டார்.

அவர் தனது ஆரம்பகல்வியை மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலத்தில், மேற்கொண்டு தனது கல்வியை சென் தோமஸ் பாடசாலையிலும் தொடர்ந்து கற்று தேர்ச்சி பெற்று "தாதி" தொழிற் கல்வி பயில்வதற்கு இருந்த வேளையில் தையல், பின்னுதல் போன்ற பல கைத்தொழில்களை பயின்றார். அவர் தனது 18 வயதில் பெற்றோர்கள் நிச்சயித்தபடி வைத்திலிங்கம் வேலுப்பிள்ளை என்னும் கமநல சேவையாளரை மணம் முடித்து இல்லற வாழ்க்கையை தொடர்ந்தார். இவர் பாலச்சந்திரன், சிவஞானேஸ்வரி, மகேஸ்வரன், குலராசசேகரன் என்பவர்களை பிள்ளைச் செல்வங் களாக பெற்றெடுத்து இன்பமாக தன் கணவனுடனும் பிள்ளைகளு டனும் தனது இல்லற வாழ்க்கையை சந்தோஷமாக வவுனியா

மாவட்டத்தில் உள்ள பாவற்குளம் என்னும் இயற்கை அழகு நிறைந்த சிறிய கிராமத்தில் விவசாய தொழில் செய்து சகல செல்வங்களுடன் வாழ்ந்தார்.

இவரின் சிரேஸ்ட புத்திரரான பாலச்சந்திரன், அருள்சிலோசனாவை 1979இல் திருமணம் செய்து விஜயலட்சுமி, கணேசவேல் என்னும் இரு பிள்ளைகளை பெற்றெடுத்து டென்மார்க் எனும் நாட்டில் சந்தோஷமாக தனது வாழ்க்கையை நடத்தி வருகிறார்.

இவரின் ஆசை மகளான, சிவஞானேஸ்வரி, ஆனந்த வீரசிங்கம் என்பவரை 1978இல் மணம் முடித்து சிவஞானகோபன், வினோப்பிரியா, நவதீசன் எனும் மூன்று செல்வங்களை பெற்றெடுத்து இலங்கையில் இல்லற வாழ்க்கையில் சிறந்து விளங்குகிறார்.

இவரின் இரண்டாவது புத்திரரான மகேஸ்வரன், மலர்விழியை 1988இல் திருமணம் செய்து தர்சிகா, தணிகா எனும் இரட்டை செல்வங்களுடன் இல்லற வாழ்க்கையை சிறப்புடன் ஜேர்மனி நாட்டில் வாழ்ந்து வருகிறார்.

இவரின் கனிஸ்ர புத்திரரான குலராசசேகரன், சித்திராதேவியை 2000ம் ஆண்டில் திருமணம் செய்து தேனுசன், தேவகன், தேசாயினி எனும் மூன்று செல்வங்களைப் பெற்று சகல சௌகரியங்களுடன் லண்டன் மா நாகரத்தில் வாழ்ந்து வருகிறார்.

இப்படியெல்லாம் சந்தோஷமாக தன் இல்லற வாழ்க்கையில் இருந்த வேளையில் அவர் தன் 60வது வயதில் அவரது அன்புக் கணவரான வேலுப்பிள்ளை வைத்திலிங்கம் இறைவனடி சேர்ந்தார். அதன் பின் தனது வாழ்க்கைப் பயணத்தை தொடர்வதற்காக டென்மார்க் இற்கு 1991இல் தன் சிரேஷ்ட புத்திரரான பாலச்சந்திரன் குடும்பத்துடன் இணைந்து கொண்டார். அவர் டென்மார்க் எனும் நாட்டில் Nyborg எனும் நகரத்தில் 21 வருடங்களாக அவ் நகரத்தி லுள்ள தமிழ் உறவுகளுடன் அன்பாகவும் பண்பாகவும் சிரித்த முகத்துடனும் வரவேற்று உபசரித்து தனது வாழ்க்கையை நடாத்தி

வந்தார். அத்துடன் அவர் Nyborg நகரத்தில் உள்ள இந்துமத இளைய தலைமுறையினருக்கு சைவசமய கதைகள், தேவார வகுப்புக்கள் என 21 வருடங்களாக தன் ஓய்வு நேரங்களை பொன்னாக செலவிட்டார்.

மற்றும் இவர் தன் 82 வயது வரை இலங்கை, இந்தியா, இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்சு, சிங்கப்பூர், மலேசியா என்று பல நாடுகளுக்கு சுற்றுலா செய்து தன் நெருங்கிய உறவுகளான சகோதரர்கள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் என்று எல்லோருடனும் தன் காலங்களை சந்தோஷமாக கழிப்பதில் செலவிட்டார்.

இவரின் பேரப்பிள்ளையான விஜயலட்சுமியும் பேரப் பிள்ளையான சிவஞானகோபனும் 2005இல் திருமணம் செய்து கிசோரி எனும் மகளை பெற்றெடுத்து சந்தோஷமாக லண்டனில் வசித்து வருகின்றனர்.

இவரின் பேத்தியான வினோப்பிரியா கணேஷ்குமாரை 2006இல் மணம் முடித்து கஜானன், காருணிஜா எனும் பிள்ளைச் செல்வங்களுடன் சந்தோஷமாக லண்டன் எனும் மாநகரத்தில் வாழ்ந்து வருகிறார்.

இப்படியெலல்லாம் சந்தோஷமாக பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், நண்பர்கள் என்று ஆரோக்கிய மாகவும் சந்தோஷமாகவும் கழித்துக் கொண்டிருந்த வேளையில் 12.12.2012 அன்று காலை 9 மணியளவில் காலனின் பாசக்கயிற்றில் வீழ்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*நாடோ தவிக்குதம்மா நாட்டு மக்கள் தேடுவினம்*
*ஊரோ தவிக்குதம்மா உங்கள் உற்ற மக்கள் தேடுவினம்*
*நீங்கள் கையெடுத்த அந்த தும்பிக்கை ஆண்டவர்*
*தன் தும்பிக் கையால் தூக்கி சிவன் திருவடியில்*
*சேர்த்தாரோ எல்லாம் சிவன்செயலே*

# மூத்த மகனின் புலம்பல்

அன்னையே எங்கள் ஆலயமே
உன்னைப்பிரிந்த துயர் சொல்ல வார்த்தையில்லை
கருவுக்குள் எம்முயிர் தாங்கி உருவம் தந்த தாயே - உன்
திருவுருவம் காணாது தவிக்கிறேன் தாயே - உன்
உதரத்தில் இடம்கொடுத்து, உதிரத்தை பாலாக்கி
உடலை வருத்தி எனை வளர்த்த தெய்வமே
உலகைவிட்டு உன்னுயிர் பிரிந்ததால் துடிக்கிறேன் அம்மா
என் வாழ்க்கைக்கு வழிகாட்டிய நீ
உன் வழியை ஏனம்மா எனக்கு சொல்லவில்லை
காலை வேளையில் உன் தேனான பாடலையும்
சூடான தேநீரையும் இனி எந்த வேளையில்
சுவைப்பேனம்மா
பாலன் பாலன் என்று நீ அழைக்கும் பாசக்குரலை
இந்த பாலன் கேட்காமல் பரிதவிக்க அந்த
காலன் உன்னை பறிந்து விட்டானே அந்த
காலன் உன்னை பறித்து விட்டானே அம்மா
ஏழு மூன்று ஆண்டுகளாய் டென்மார்க்கில் என்னுடனே இருந்தாய்
அழுது அழுது அழைக்கிறேன் அம்மா என்று
நீ வரவில்லை அம்மா
ஏழு ஏழு சென்மம் எடுத்தாலும் நான் உன்மகனாய்
பிறக்கவேண்டும் தாயே
கண்ணுக்குள் மணியென எனைக்காத்த என்
கண்கண்ட தெய்வமே
கொடியநோய் எதுவுமின்றி திடமாய் வாழ்ந்து
நொடிப் பொழுதில் உயிர் பிரிந்த என் தாயே
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் வேண்டுகிறேன்.

மகன் பாலச்சந்திரன் (பாலன்)
(டென்மார்க்)

## மகள் புலம்பல்

என் அருமை அம்மாவே! பத்து மாதம் சுமந்து
பாலூட்டி சீராட்டி வளர்த்தீர்கள் தூரதேசம் சென்றாலும்
பிள்ளை பிள்ளை என்று அன்பாக அழைத்து பேசினீர்கள்:
இனியார் எனக்கு!
வருவேன் வருவேன் என்று கூறினீர்கள் கடைசியில்
எனது முகத்தை கூட பார்க்காமல் என்னுடன்
ஆசை வார்த்தை பேசாமல் போய்விட்டீர்கள்.
நான் உங்களை பார்க்க கொடுத்து வைக்க முடியாத
பாவியாகிவிட்டேன்!
அம்மா எனக்காக எனது பிள்ளைகளுக்காக
எவ்வளவோ உதவிகள் செய்தீர்கள்
இனி எனக்கு யார் அம்மா இருக்கினம்? உங்கள்
வெள்ளையுள்ளம் கொண்ட மனத்திற்கு
திடீர் என்று கடவுள் அழைத்து விட்டார்.

நாட்டுக்கு ஏற்ற மேலுங்கான உடையும்
நீட்டு நடை பயின்ற காட்சியுடன்
மனதில் இன்றும் நிலைத்து நிற்குதம்மா
தளராத வயது ஆனாலும் கம்பீரம்
துவளாத மனதோடு நிமிர்ந்து நின்றாய் அம்மா
பாசப்பிணைப்பினால் தவித்து எம்மையெல்லதம்
வீசப்பட்ட கயிறு விலக்க வைத்த தென்னே அம்மா

திடுக்கிடும் செய்தி வந்து
திகைப்பினை ஊட்டி எமக்கு
மீளத் துயரினை தந்ததம்மா
சடுதியில் வந்த காலனும் - உந்தன்
உயிர்தனை பறித்ததேனோ அம்மா
ஊரில் உலாவி எம்மை
மற்றவர் போற்றும் வண்ணம்

நல்லதை ஊட்டி வளர்த்தீர் அம்மா
கதற வேண்டும் போல் இருக்குதம்மா
கதறமுடியவில்லை கண்ணீர்
மழை பெய்வதனை என்னால்
தடுக்க முடியவில்லை அம்மா
தூரதேசமானாலும் உன் உடலை
கண்டு தொட்டு கதற முடியவில்லை - அம்மா
நேசமுடன் ஏங்கும் மனதோடு
விடை தந்து கண்ணீர் கூறுகின்றேன் அம்மா

ஆசை மகள்
சிவஞானேஸ்வரி (ஈஸ்வரி)
இலங்கை

## மகன் மகேஸ்வரன் புலம்பல்

கண்ணிற்கும் கண்ணாய் வளர்த்திட்டு
மண்ணிற்கு இரையாகி போனீரோ - அம்மா
விண்ணூர்ந்து வந்து இருக்கையில்
மண்ணின் கதையெல்லாம் சொன்னீரே - அம்மா
பண்பாடு மாறாமல் இருந்திடவே
வண்ணமாய் கருத்துக்கள் ஏற்றிவைத்தீர்
கண்டும் காணாமல் கதறுகின்றோம் - அம்மா
காலன் செய்து விட்ட கொடுமைதனை
தேற்ற விரும்புகிறேன் தேம்பி அழுகின்றேன் - அம்மா
பாசம் காட்டி நீ பரிதவிக்க விட்டு விட்டீரே - அம்மா
காலச் சுமியின் வித்தையினை உணர்த்தி நின்றீர்
தேற்றும் பல சுற்றம் சூழ விருந்து
தேற்றினும் தேம்பி அழுகின்றேன் - அம்மா

மகன் மகேஸ்வரன் (மகேந்திரன்)
ஜேர்மன்

## இளையமகன் குலராசசேகரன் (சனா) புலம்பல்

உலகிற்கு உருட்டி விட்ட
உடலம்மா இது உந்தன் ஏக்கம்
காலமெல்லாம் கைதந்து
காட்டிவிட்ட பாசத்தை எட்டி உதறிவிட்டாய் - அம்மா
நேசமோடு ஊட்டி வளர்த்த
எம்மையெல்லாம் மறந்துவிட்டீரோ - அம்மா
நீ இறந்து விட்டால் - நாம்
இறக்க விட்டோமோ அறியோம் அம்மா

ஞானிலத்தில் நாங்கள் பெயரெடுக்க
நல்லதும் கெட்டதும் ஓதி வைத்தாய் - அம்மா
நலமான வாழ்க்கை நீண்டிடவே
நீண்ட பயணத்தில் ஏங்க வைத்தாய் - அம்மா
நலமான வாழ்க்கை நீண்டிடவே
நீண்ட பயணத்தில் ஏங்க வைத்தாய் - அம்மா
சுகமான வாழ்வைதனை கண்டிடவே
எம்மோடு நீ கூட இருந்து
நம்மோடு பாதிவழி விட்டீர்
பரலோகம் போனது ஏனம்மா

மகன் குலராசசேகரன் (சனா)
லண்டன்

*சதா தன்புகழையும் சிறப்பையும் பாடிக்கொண்டும் பேசிக் கொண்டும் இருப்பவர்களைவிட தான் இட்ட கட்டளைகளை நிறைவேற்றுபவர்களையே இறைவன் பெரிதும் விரும்புகின்றான். எனவே அவன் இட்ட கட்டளையான கடமைகளை நிறைவேற்றுவதோடு அவன் புகளையும் சிறப்பையும் பாடிக்கொண்டும் பேசிக்கொண்டும் இருங்கள் இரட்டைப்பயனை இறைவன் உங்களுக்குத் தருவான்!*

## மருமகள் சிலோசனா புலம்பல்

அன்னைக்கு நிகரான தெய்வமே - உன்
அன்பினை சொல்ல வார்த்தை இல்லை
உன் பிள்ளையை கைப்பிடித்த நாளே - என்
இதயத்தின் தாயானீர்
நம் வசந்த வாழ்விற்கு வழிகாட்டிவைத்த தெய்வமே
இன்று நீர் மறைந்தது என்ன?
உன் நினைவுகளில் இருந்து மீளமுடியாமல்
துடிக்கிறேனம்மா...
அடுப்படியிலிருந்த என்னை அழைக்காது போனதென்ன?
என்னுடன் எதுவும் சொல்லாமல் போய்விட்டாயேயம்மா
உன் மைந்தனுக்கு நான் என்ன பதில் சொல்வேன்
சிலோசனா என்று கூப்பிடும் உங்கள் குரல்
எம் மனையில் ஒலிக்குதம்மா...
என்ன செய்கிறது என்று நான் கேட்ட பொழுது
பதில் கூறாது என் கண்முன்னே
காற்றோடு காற்றாய் சென்றதேனோ?
நினைத்து நினைத்து நான் கலங்குகிறேன்
உன் மீது கொண்ட அன்பு என் விழிகளில்
கண்ணீராய் சொரிகின்றன...
உன் ஆத்மா சாந்தியடைய மலர் தூவி
நிற்கின்றேன்.

மருமகள் சுலோசனா
(டென்டார்க்)

*நீலிலோர் குமிளிதோன்றி நில்லாமல் அழிதல்போலும்
வானிலோர் வர்ணம் தோன்றி வளராமல் மறைதல்போலும்
மானிட வாழ்வும் தோன்றி மறைந்திட முன்னர் நீங்கள்
நானிலம் போற்றநாலு நல்லன் செய்தே நிற்பீர்!*

## மருமகன் புலம்பல்

அன்பு மாமியே! சிரித்த உங்கள் முகம் பார்த்தேன்!
பலர் போற்றும் பண்பு கண்டு மகிழ்ந்தேன்!
நான் லண்டன் வந்தபோது
அன்பாக பேசிய வார்த்தையை மறக்கவில்லை!
அனைவரினதும் மனதிலும் இருள் சூழ்ந்திடவே
சொர்க்கமே தான் சென்றீர்களோ! மாமி
உங்களது ஆத்மா நித்திய ஆனந்தத்தில்
திளைத்திருக்க வேண்டுகிறேன்
உங்கள் பிரிவால் துயருறும்

மருமகன் ஆனந்தன்
(வவுனியா)

## மருமகள் மலர்விழி புலம்பல்

உற்றவரும் மற்றவரும் போற்ற
உத்தமியாய் வாழ்ந்த - மாமியே
இல்லையில்லை என் அம்மாவே!
அன்புமகனை பெற்றெடுத்து
எனது துணைவனாக எனக்கீந்த மாமியே
தாயாக எனக்கு அன்பு காட்டினீர்களே
உங்கள் அன்பு முகம்
இனி என்று காண்பேன் - மாமி
எனை விட்டு தொலை தூரம்
சென்றீரோ மாமியே!

மருமகள் மலர்விழி (மலர்)
(ஜேர்மன்)

## மருமகள் சித்திராதேவி புலம்பல்

என் அருமை மாமியே
சிறுவயது முதலே என்னை நேசித்தீர்களே
தாயாகவும் மாமியாகவும் அரவணைத்தீர்களே
புன்னகை தவழும் முகத்துடன்
என்றும் அறிவுரைகள் கூறினீர்களே
புலம்பெயர் நாட்டில்
புலம்பெயராத பண்புகளுடன் வாழ்ந்தீர்களே
என்னையும் மகனையும் பேரப்பிள்ளைகளையும்
அன்புடன் நேசித்தீர்களே
அடுத்த ஜென்மம் - நம்
அனைவருக்கும் உண்டானால்
உம் கருவறையில் வாழ
வரம் வேண்டும் தாயே

மருமகள் சித்திராதேவி (சித்திரா)
(லண்டன்)

## தம்பி தில்லை நடராஜா புலம்பல்

என் அன்பு அக்காவே
தம்பி தம்பி என்று ஆயிரம் முறை கூறுவியே
என்னை கண்டவுடன் இனிய கதை பேசி
வாய்க்கு சுவையாக சமைத்து தருவியே
நீ வருவாய் என்றல்லோ நான் இருந்தேன்
உனது திடீர் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தேன்
உன் நான்கு பிள்ளைகளின் வாழ்வு கண்டு
மகிழ்ந்திருந்த வேளையில் உன்னை திடீர் என்று
காலன் அவன் கவர்ந்து விட்டான்
இனி எப்போ காண்போம்
அக்கா உன் திருமுகத்தை

தம்பி தில்லைநடராஜா

## தம்பி காசிராஜா புலம்பல்

திடுக்கிடும் செய்தி கேட்டு
திகைப்புடன் நின்றேன் அக்கா
சடுதியில் வந்த காலன்
உன் உயிர் பறித்தது ஏன் அக்கா
லண்டனில் பார்த்து ஏங்கியதை
இன்னமும் மறக்கவில்லை நான்
தடுமாறித் தவித்த போதும்
கட்டி அணைத்து மோந்தாய்

நேசமுடன் நெஞ்சில் வைத்தாய்
பாசத்தின் வழியும் காட்டி நின்றீர்
தம்பியென்று அழைத்து
அடைமழை பொழிந்து நின்றாய்
நல்லதும் கெட்டதும் சொல்லி
நல்லவனாக வாழ வைத்தாய்
தாயைப் போல் பாசம் காட்டி
பரமன் சேவையில் சிறக்க வைத்தீர்

படாத பாடுபட்ட உன் வாழ்வு
சீரும் சிறப்புமாய் ஓங்கியது
தேடிய செல்வங்கள் உன்னை
தெய்வமாய் போற்றி நின்றன
பார்த்திருந்த பாசங்கள் இங்கு
அக்காவின் ஆத்மா சாந்தி பெற எல்லாம்
வல்ல வீரபத்திரனை அருள்
வேண்டிப் பணிகின்றனர்.

தம்பி காசிராஜா (காசி)

## தம்பி விக்கினேஸ்வரனின் புலம்பல்

என்இனிய சகோதரியே!
வார்த்தைகள் பேனாவழி வரவில்லை
கண்ணீர் வழி வருகிறதக்கா
என் உடன் பிறப்பே
எனி எப்போ உன்னுடன் பிறப்பேன்
எங்கள் ஏழ்வருக்குள் மூத்தவளாகப் பிறந்தாய்
வழிகாட்டியாக இருந்தாய்
வழிமாறி போனது என்ன
என்ன சொல்லி ஆற்றமுடியும், உன் இழப்பின்
சோகத்தை என்ன சொல்லி மாற்றமுடியும்
எண்ணியெண்ணி இன்னும் நெஞ்சு வெடிக்குதக்கா
அக்கா என்று அழைக்க நான் இருந்தும்
அதை காதில் வாங்கிக் கொள்ள நீ இல்லையே
என்று எண்ணும் போது இன்னும்
நெஞ்சம் பொறுக்குதில்லையே
என்ன சொல்லியும் என் மனதை ஆற்றமுடியாது
உணர்வுகளுக்கு தடைபோட முடியவில்லை....

தம்பி விக்கினேஸ்வரன் (ராசன்)

*பாதையிலே செல்கின்ற ஒருவர் அங்கே சங்கு ஒன்றைக் கண்டு எடுத்துவிட்டால் அதை சங்கு என்று கூறி ஓரமாக வீசிவிட்டுச் செல்வதுமுண்டு இன்னும் சிலர் எடுத்த சங்கை அதுவலம்பிரியா இடம்புரியா என்று ஆராய்வதுமுண்டு அப்படி ஆராய்ந்தவரே அது வலம்புரியாக இருந்தால் அதன் லாபத்தை அனுபவித்தல் போல நீங்களும் எந்த ஒரு விடயத்தை எடுத்தாலும் அதனை ஆராய்ந்து பாருங்கள் நஸ்ரம் ஒன்றுமில்லை லாபம் நிச்சயமாக உங்களுக்காகவே இருக்கும்*

## தங்கை புலம்பல்

என் பாசமுள்ள பெரிய அக்காவே
உன் பாசமுள்ள தங்கை உன் பிரிவால் வாடுகிறேன்
என் அன்னையைப்போல் அருகிலிருந்து
அன்பு காட்டியவள் நீ அக்கா
உன்னைப்பிரிந்த துன்பத்தில் துவழ்கிறேன்
எனக்கு ஆறுதல் அளிக்க வரமாட்டாயோ அக்கா
எனக்கு மட்டும் நீ தாயாய் இருக்கவில்லை
என் பிள்ளைகளுக்கும் தாயாய் இருந்தாயே - உன்
வாய்நிறைந்த சிரிப்பிலே மகிழ்ந்தோமே - இன்று
தாயைப் பிரிந்த சேய்களாய் தவிக்கின்றோம்
என்னை கனடா நாட்டுக்கு அனுப்பி விட்டு
எனக்கு சொல்லாமல் நீ எந்த நாட்டுக்கு சென்றாய் அக்கா
கண்ணீர் மழையாய் பொழியுது அக்கா
கணவரை இழந்த மனத்துயரில் நானிருக்க என்
கண்ணீரை துடைக்காமல் என் கணவரிடம் சென்றாயோ
கண்மணியாய் என்னை காத்தவளே - இனி எப்போ
காண்பேன் உன்னை என் கண்ணில்
புலத்திலே என்றும் எனக்கு பலமாய் இருந்தாய்
புலம்பெயர்ந்து வந்தும் என் வலக்கையாய் இருந்தாய் இன்று
என்னை கலங்கவிட்டது ஏனோ அக்கா
மண்ணுலக வாழ்க்கை போதும் என்று
விண்ணுலக வாழ்வுக்கு சென்றோயோ என்னருமை அக்கா
இறைவனின் திருவடியில் உன்னருகில் எனக்கோர் இடமிருந்தால்
குறையின்றி நான் என்றும் மகிழ்ந்திருப்பேன்
ஒரு கிளையில் பூத்த மலர்கள் நாம் அக்கா
ஒரு போதும் நீ இன்றி என்னால் மலர்ந்திட முடியாது
உன் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகிறேன்

சகோதரிகள்
தங்கா, பூமணி, இரத்தினம்

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

எங்கள் ஆசை அம்மம்மாவே அன்பான எங்கள்
உயிரே பாச மழை பொழியும் பண்புடைய எங்கள்
அம்மம்மாவே நேசமுடன் எப்பொழுதும் உங்கள்
வாயால் எங்கள் பெயரை உரைப்பதுவோ! மோசம்
வரும் என்று சிறிதும் நாங்கள் எண்ணவில்லை
வேசம் இல்லாத வெள்ளையுள்ளம் கொண்ட
அம்மம்மாவே வாசமலர் எங்கே சிரித்த முத்தழகே
சொந்த மண்ணை விட்டு வெகு தொலைவில்
போனாலும் வந்து வந்து பேசும் வார்த்தை இனி
எப்போது கேட்போமோ மூத்த பேரன் என்று கட்டி
அணைத்தீர் கதைகள் பல கூறுனீர்கள் எங்கள்
முன்னேற்றத்தக்கு வழி காடடினீர்களே நான் எப்படி
மறப்பேன் என் அம்மம்மாவை! பேத்தி வினோக்குட்டி
என்று விரும்பியது எல்லாம் வேண்டி தந்து என்
தேவைகளை எல்லாம் பூர்த்தி செய்தீர்கள் இனி
எப்போது காண்பேன் என் அம்மம்மாவை உங்களை
நேரில் பார்க்கலாம் என்றல்லோ நானிருந்தேன்
உங்கள் கடைசி பேரனை பார்க்காமலே
போய்விட்டீர்களே உங்கள் பிரிவால் துயருறும்

**பேரப்பிள்ளைகள்**
**கோபன், வினோ, நதீஸ்**

*விழாமல் இருப்பதில் எப்பெருமையும் இல்லை. விழுந்து விடுவதில் எச்சிறுமையும் இல்லை. விழுகின்ற ஒவ்வொரு முறையும் நாம் கம்பீரமாய் எழுவோமாயின் அதுவே வெற்றியும் கம்பீரமும் ஆகும்.*

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

எங்கள் ஆசை அப்பம்மாவே ஆசையாக கதை சொல்லி ஆசையாக அரவணைத்து முத்தம் பல தந்து எல்லோரையும் வளர்த்தீர்கள் உங்கள் அன்புக்கு யாராலும் ஈடு செய்ய முடியாது திடீர் என்று மரணம் என்று ஒன்று வந்து எங்களை பிரித்ததுவோ! அப்பம்மா மூத்த செல்ல பேத்தி என்று பெயர் சூட்டி, தாலாட்டி, அரவணைத்து என்னை வளர்த்தீர்களே அப்பம்மா உங்கள் அன்பு பேச்சுக்காக ஏங்குகின்றேன். இன்று உங்கள் இனிமையான நினைவுகளை மட்டும் விட்டு சென்றுள்ளீர்கள்! அப்பம்மா செல்ல பேரன் என்று செல்லமாக என்னுடன் கதை பேசினீர்கள் எங்கு சென்றாலும் கவனமாய் போய்வா என்று கூறுவீர்களே அப்பம்மா என்றால் உங்களை மறக்கமுடியவில்லை தர்சிகா, தணிகையா என்று பாசமுடன் கூப்பிடுவீர்களே இப்போ வரமுடியாத இடத்துக்கு சென்று விட்டீர்களே குட்டி பேரன்கள், பேத்தியை இனி யார் வந்து பாப்பினம்? நாங்கள் வளர்ந்து வரும் வரை நீங்கள் இருப்பீர்கள் என்றல்லோ நினைத்து இருந்தோம் அப்பம்மா கண்ணீருடன் விடைபெறுகிறோம்.

**பேரப்பிள்ளைகள்**
**விஜி, கணேஸ், தர்சிகா, தணிகையா,**
**தேவகன், தேனுசன், தேசாயினி**

*மூடிய கைகளுடன் உலகிற்கு வரும் நாம் எதையும் கொண்டு செல்லவில்லை எனக்காட்ட திறந்த கைகளுடன் சிவனடி சேர்கின்றோம்.*

## மருமக்கள் புலம்பல்

அன்புக்கோர் உறைவிடமே அருமை மாமியே
தங்களது அன்பு முகத்தைக் காணவில்லை
இனி எங்கே போய் காண்போமோ
உங்கள் அன்பை நினைத்து நினைத்து
கண்ணீர் சொரிகிறதே
ஏற்றமுடன் நீங்கள் உரைக்கும் வாத்தையில்
எத்தனை அர்த்தமுண்டு என்பதை
இப்போ உணர்கிறோம்
என் மூத்த மாமியே என்னை காணாவிட்டால்
தர்மர் ஏன் வரவில்லை என்று தேடுவீர்களே!
இனியார் என்னை தேடுவது!
நீங்கள் எங்களைவிட்டு வெகுதூரம்
சென்று விட்டீர்கள்
என்றும் உங்கள் நினைவு மறையாது
எங்கள் அன்பு மாமிக்கு
எமது கண்ணீர் அஞ்சலி

**மருமக்கள்**
**தர்மர், செந்தில், கரன், சுதா,**
**சாந்தி, பதி, சுபத்திரா**

*நீ செல்லும் பாதை மலர்கள் நிறைந்ததாக இருக்க வேண்டும் என்று எண்ணாதே. அது சோம்பேறிகளின் எதிர்பார்ப்பு. நீ செல்லும் பாதையை செப்பனிட்டு மலர்கள் நிறைந்ததாக மாற்றி நிறைந்ததாக மாற்றிப் பயணி. அப்பயண இனிமை அவர்களுக்கே புரியும்.*

## பெறாமக்கள் புலம்பல்

அன்பான எங்கள் பெரியம்மாவே – உங்கள்
அன்புக்கு நிகராய் யாருண்டு இவ்வுலகில்
பெரியம்மா பெரியம்மா என்றழைக்கையிலே
பெற்ற தாயைப் போல் பாசம் காட்டினீர்கள்
தன்னலம் பார்க்காது எம்நலம் காத்த பெரியம்மாவே
புன்னகை பூத்த உங்கள் முகத்தை இனி எங்கு காண்போம்
பெற்ற தந்தையை இழந்த துயர் மறையமுன்னர் எம்
உற்ற பெரியம்மாவையும் இழந்து துடிக்கிறோம்
உணவு தந்து உபசரித்து உள்ளம் மகிழ கதை பேசிய
எம்முயிர்ப் பெரியம்மா எங்கே சென்றீர்கள்
பிறந்த மண்ணிலும் வாழ்ந்த மண்ணிலும் எம்மோடு இருந்துவிட்டு
விண்ணுக்கு மட்டும் தனியே சென்றதேன்?
மார்மேலும் தோள்மேலும் போட்டும் அன்பு காட்டிய
பெரியம்மாவே பாரினிலே உங்களை எங்கு காண்போம்

உங்கள் பிரிவால் வாடும் பொறாமக்கள்.
சசி, சுசி, கண்ணா, றமா, லச்சு

## மைத்துனிமார் புலம்பல்

மச்சாள் நீங்கள் மண்ணுலகில் வாழ்ந்த காலம் போதும் என்று விண்ணுலகம் சென்றீரோ! நேசத்தில் உயர்வாக நின்ற மைத்துனியே இன்பத்திலும் துன்பத்திலும் இணை இருந்த மைத்துனியே என்பத்திரண்டு ஆண்டு வாழ்ந்தது போதும் என்று எண்ணிணையோ! நீத்து உடல் மறைந்தாய் வேதனையை யார் அறிவார். உங்கள் ஆத்மா சாந்தி அடைய வேண்டுகிறோம்.

மைத்துனிமார்
வேவி, ராணி, கௌரி

## பூட்ட பிள்ளைகள் புலம்பல்

மண்ணகத்தே நின்று எம்மை கரம் நீட்டி வரவழைத்த அன்புள்ள பூட்டியாரே நாமிருக்க எங்கு சென்றீரோ! எண்ணத்தில் என்றுமே எம் நினைவை தேக்கி வைத்து வண்ண வண்ணக் கதையோடு வார்த்தைகளும் கொஞ்சி வைத்து முன்னுக்கு வர வேண்டும் என்று எமக்கு எடுத்துரைத்த பண்புள்ள பூட்டியாரே எங்கு சென்றீர்களோ! என்று தேடுகிறோம்.

அன்புள்ள பூட்டியாருக்கு
பூட்டப்பிள்ளைகள்
கஜானன், கிசோரி, காருணிஜா

## "நான் நடந்து கொண்டே காலமாவேன்..."

இது ஞானம்பாள் வேலுப்பிள்ளை (ஞானாம்பிகை) அவர்கள் தான் உயிரோடு இருக்கும் போதே தனது மூத்தமகனிற்கு பல தடவைகள் உதிர்த்த ஞானவாக்கு இதனை மகனார் தனது அன்னையின் பூதவுடலை புண்ணிய உலகிற்கு அனுப்பி வைக்கும் புனித வைபவத்தில் கலந்து கொண்ட சபையோர்க்கு சொல்லியும் வைத்தார்.

மேலும் ஞானாம்பிகை அவர்கள் தன் வாழ்வின் கடைசி கட்டத்தினை உள்ளுணர்வு ஊடாக உய்த்து உணர்ந்து இருந்தும் மற்றவர்கள் மனம் பதட்டப்படாது இருக்க பார்த்துக் கொண்டார். யமகாலனுடன் இடம்பெற்ற அகயுத்தம் பற்றி மனப்பொறுமையுடன் பொறுமை

காத்துள்ளார். காலை எழும்பி தன் வேலைக்கு சென்ற மகனின் தரிசனத்தை ஏற்று மருமகளின் பிரசன்னத்துடன் காலனுடன் ஏற்பட்ட சண்டையில் தோற்காது வாயு பகவானின் உதவியுடன் பரமன் பதமடைந்து விட்டார். என்னே ஞானம்பிகையின் பக்தியின் முத்திநிலை.

தனது பெற்றோரிட்ட நாமத்திற்கு ஏற்றாற்போல் ஞான + அம்பிகையாக பூவுலகில் வாழ்ந்து வாழையடி வாழை போல் நான்கு பிள்ளைச் செல்வங்களை பெற்று அவர்களூடாக பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளை கூட பெற்று அவர்களுடனும் வாழும் வாய்ப்பு பெற்று பூரணமான பூவுலக வாழ்வை துய்த்து திருப்தி அடைந்து தன் ஞான மேலீட்டால் "நான் நடந்து கொண்டே காலமாவேன்" என தீர்க்கதரிசனமாக கூறிச் சென்ற தாயே, உனக்கு வேறெவரும் ஈடுஇணை இல்லை.

ஈழ நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து வந்து டென்மார்க் நியூபோர்க் நகரில் வாழ்ந்து இங்குள்ள பல இளம்பிள்ளைகட்கும் உன் பக்தி பரவச பாடல்களை கற்பித்து சென்றுள்ளீர் இதன்படி பல்லோர் மனதிலும் நீங்காத நினைவாக நற்பதிவினை விட்டு சென்றுள்ளீர். உங்கள் பதிவுகள் எம்மை விட்டு நீங்காது நீங்கள் இன்னும் எம்முடன் உள்ளீர். ஆவணி பொங்கல், சைவ விழாக்கள், கந்தசஷ்டி என்று பல நிகழ்வுகள் உங்களை நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கும். அந்நேரமெல்லாம் உங்கள் ஆத்மா சிவனின் பேரவையில் சிவபதம் பெற்றிருப்பதனை உணர்வோம்.

நற்பதம் பெற்று பரமன் பதமடைந்து பிறப்பு - இறப்பு சக்கரத்திலிருந்து வீடுபேறு பெற்று பரமன் பேரவையில் நிரந்தரமாக வீற்றிருக்க பிரார்த்திக்கின்றோம்.

மாதகல் டென்மார்க்
நலம்புரி சங்கத்தினர்.

## அந்தியேட்டி என்பதும் ஆட்டுத்திவசம் என்பதும் கண்களுக்குத் தெரியா கடவுளரின் கிரிகைகளாம்....

இயற்கையான இறப்பு என்கின்ற பெயரால் தன்விருப்போடு ஒரு உடலை விட்டு வெளியேறுகின்ற ஆத்மா வெளியேறிய நாளிலிருந்து முப்பத்தி ஏழு (37) நாட்கள் வரை அருவ நிலையிலே அவனியிலே நடக்கின்ற அனைத்தையும் அவதானித்துக் கொள்ளும் இறுதிக் கிரியைகள், தகனக்கிரியைகள், காடாற்றுக்கிரியைகள், எட்டுக் கிரியைகள் என்பவற்றை எல்லாம் அது உன்னிப்பாக அவதானித்துக் கொள்ளும். இறுதியாக முப்பத்தி ஓராம் நாளாம் நாள் (31) அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகளைக் கண்டுகொள்ளும் அப்படிப்பட்ட ஆத்மா முப்பத்தி ஓராம்நாள் (31)முடிந்ததுமே தான் வேறு ஒன்றினுள் புகுந்து கொள்வதற்காக விடைபெற்றுக்கொள்ளும். இது ஒரு சம்பிரதாயமன்று மேற்படி கிரியைகளில் ஆத்மாவின் அவதானிப்பு நிறையவே இருப்பதால் கிரியை அவதானம் மிக மிக அவசியமாகும். இக்கிரியைகளின் நிறைவுகண்டு ஆசீர்வதிக்கின்ற ஆத்மா கிரியைகளில் குறைகண்டால் சபிக்கவும் செய்யும். ஆத்மா என்பது படைத்தவனின் பிரதிநிதி என்பதால் ஆசீர்வதிப்பும் சாபமும் பலித்தே தீரும். ஆத்மா என்பது சஞ்சரிக்கக் கூடியது என்பதால் நிறைவோடு விடைபெற்றுச் செல்கின்ற ஆத்மா மீண்டும் ஒரு வருடத்தின் பின்னால் எந்தத்திதியில் தன் உடலை விட்டுப் பிரிந்ததோ அதே திதியில் மீண்டும் தான் வாழ்ந்த இடம், தான் தேடிய உறவுகள், தனக்கான விருந்துகள் என்பவற்றை அனுபவிப்பதற்காக அருவ வடிவிலே சஞ்சரிக்கும். அதுவே ஆண்டுத் திவசம் எனப்படும். அன்றும் நாம் அந்த ஆத்மாவின் பார்வைக்கு எட்டக் கூடியதாகக் கிரியைகளைச் செய்யவேண்டும். எம்முடைய கிரியைகள் நிசமானதாயும் அதன் பார்வைக்கு எட்டக்கூடியதாகவும் இருந்தால் ஆத்மீக ஆசீர்வாதங்கள் எங்களுக்கு நிறை உண்டு. இல்லையானால் ஆத்மாவின் சாபத்திற்கு ஆழாகி நின்மதி இழக்க வேண்டிய நிலையும் தவிர்க்க முடியாமல் போய்விடும். காற்றோடு கூடி இருக்கின்ற நாங்கள் காற்றினை கண்களுக்குத் தெரியாவிட்டாலும் அதனை அனுபவிக்கின்றோமல்லவா அதே போலத்தான் ஆத்மாக்களும் எங்களுடைய கண்களுக்குத் தெரியாவிட்டாலும் அது எங்களோடு கூடவே இருக்கின்றது. நாங்கள் அதனை அனுசரித்து பலன் பெற வேண்டுமென்பதே இந்த ஆத்மீகக் கிரியைகளாகும்.

# விநாயகர் கவசம்

*(இது முத்கல முனிவருக்கு காசிபமகரிஷி உபதேசித்தது இது தமிழில் கச்சியப்ப சுவாமிகள் பின்வருமாறு பாடித்தந்துள்ளார்.)*



வளர்சிகையைப் பாரபரமாய் வயங்குவிநா
யகர்காக்க வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந் தரதேக
மகோற்கடர்தாம் அமர்ந்து காக்க
விளரறநெற் றியைஎன்றும் வியங்கியகா
சிபர்காக்க புவுந் தம்மைத்
தளர்வில்மகோ தரர்காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க 01

கவின்வளரும் அதரம்கச முகர்காக்க
தாலாங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகம் கிரிசைசுதர் காக்கநனி
வாக்கைவிநா யகர்தாம் காக்க
அவிர்நகைதுன் முகர்காக்க அள்எழிற்செஞ்
செவிபாச பாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க 02

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்ககளம் கணேசர் காக்க
வாமமுறும் இருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தாம் மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவிநா
சன்காக்க இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க அகட்
டினைத்துலங்கே ரம்பர் காக்க. 03

பக்கம் இரண்டையும்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாம் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை அல்லல்
உக்ககண பன்காக்க ஊருவைமங்
களமூர்த்தி உவர்ந்து காக்க. 04

தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்கஇரு
பதம்ஏக தந்தர் காக்க
வாழ்கரம்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் ஆசாபூ காக்க
விரல்பதும அத்தர் காக்க
கேழ்கிளரும் நகங்கள் விநா
யகர் காக்க கிழக்கினிற்புத் தீசர்காக்க 05

அக்கினியிற்சித்தீசர் காக்க உமா
புத்திரர்தென் ஆசைகாக்க
மிக்கநிரு தியிற்கணே சரர்காக்க
விக்கினவாத் தனர்மேற் கென்னுந்

திக்கதனிற் காக்கவா யுவிற்கசகன்
னன்காக்க திகழ்உ தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கில்
ஈசநந் தனரே காக்க 06

ஏகதந்தர் பகல்முழுதுங் காக்கஇர
வினும்சந்தி இரண்டன் மாட்டும்
ஒகையின்விக் கினகிருது காக்கஇரைக்
கதர்பூதம் உறுவே தாளம்
மோகினிபேய் இவையாதி உயிர்த்திறத்தால்
வருந்துயரும் முடிவி லாத
வேகமுறு பிணிபலமும் விலக்குபுபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க 07

மதிஞானம் தவம்தானம் மானம்ஒளி
புகழ் குலம்வண் சரீரம் முற்றும்
புதிவான தனம்தானி யம்திருகம்
மனைவிமைந்தர் பயில்நட் பாதிக்
கதியாவும் கலந்து சர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னான
விதியாரும் சுற்றமெலாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக்காக்க. 08

வென்றிசீ விதம்பிகபிலர் காக்கரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமும்ஓ
திடினும்பால் இடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவர்காள் அறிமின்கள்
யாரொருவர் ஓதினாலும்
மன்றஆங் கவர் தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும் 09

உ
சிவமயம்



## திருவாசக சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சி னீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமனிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க

ஈச னடிபோற்றி எந்தையடி போற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறையினும் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்தும் மண்ணிறைந்தும் மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யாய் யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே

அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பொருமான் வல்வினையேன்தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கும் மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலன்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே

நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும்வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுட ரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனே ஓ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

# கௌரி காப்பு



## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவாகனப் பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வராமற் கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினை யாவும் பனி போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்

காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியாரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடிய மகிஷாசூரனைக் கூறு போட்டவளே
அசுரக் குலம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதி விரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நேன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டு விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்து விடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டி விடு
வல்லமையைத் தந்து விடு வையத்தகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பரும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்று நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்று விளைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா

பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தெம்மைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக் வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏற்று இழையே தாயாரே
காப்பெனக்கு போட்டுவிட்டால்கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோருக்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோருக்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவிடும்
நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே இணைந்து வரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்கும பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்பு கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிக விட்ட என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில்விழித்திடுவேன்
ஞான செழுஞ் சுடரே காளியுனைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமகளைச்செய்திடுவேன்
ஏய்ப்பவரைக்கண்டால் எரிமலை போல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும்தெரியாது செய்கையிலே
காப்பு கையிலிருந்து கண்திறந்து காட்டுமம்மா
சொல்லற்கரிதான சோதிமிகு காப்பதனை
இருபத்தொரு நாள்வரையும் இசையும் விரதமொரு

தீமைச் செயலெதுவும் தெரியாத செய்கையிலே
காப்பு கையிலிருந்து கண் திறந்து காருமம்மா
பக்தி மனதுடனே பரவி அணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்திலுள் ளோரல்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்தவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

**திருச்சிற்றம்பலம்**

குங்கும சந்தனம் சவ்வாது திருநீற்றில்
துலங்கிடும் தெய்வத்தாயே
சங்கதம் மிகுந்திடும் காஞ்சியில் குடிகொண்ட
சாந்த சொரூபினியே
எந்தன் குங்குமம் துலங்கிட குலமகள் நீயே
அருள்மழை பொழிய வேணும்
என்வினை என்பூசையை ஏற்று
எமக்கருள் புரிவாய் கௌரித்தாயே

*தலையில் இடி விழுந்தாலும் கூட சஞ்சலப்படாதே*
*அச்சத்தால் ஆவது ஒன்றுமில்லை கவலைப்படுவதே*
*வாழ்வின் நரகமாகும் அது அற்றிருப்பதே முத்தியாகும்.*



## லிங்காஷ்டகம் - தமிழ்

அயன்ஹரி அமரர்கள் போற்றிய லிங்கம்
எந்தக் களங்கம் இலாதொளிர் லிங்கம்
பிறவியின் துயரைப் போக்கிடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்

முனிவர்கள் அமரர்கள் போற்றிய லிங்கம்
காமனை எரிசெய் கருணா லிங்கம்
ராவணன் கர்வம் அடக்கிய லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்

வாசனை யாவையும் பூசிய லிங்கம்
புத்தி அளித்திடும் காரண லிங்கம்
சித்தர்சுரர் அசுரர் தொழுதிடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்

கனக நவமணிகள் சூடிய லிங்கம்
பாம்பினை இடையினில் சுற்றிய லிங்கம்
தட்ஷனின் வேள்வியை வீழ்த்திய லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்

குங்குமம் சந்தனம் மின்னிடும் லிங்கம்
பங்கய மலரினைத் தாங்கிடும் லிங்கம்
பொங்கிடும் வினைகளை தீர்த்திடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்

தேவ கணங்கள் துதித்திடும் லிங்கம்
நல்லிதயத்தினில் நிலவிடும் லிங்கம்
சூரிய கோடி சுடர்விடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்

எட்டு தளங்களும் எழில்மிகு லிங்கம்
யாவும் படைத்திடும் காரண லிங்கம்
அஷ்ட தரித்திரம் போக்கிடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்

இந்திரன் தேவரின் குருதொழும் லிங்கம்
தேவ வனமலரில் பூசை கொள் லிங்கம்
முழுமுதல் பரம் என விளங்கிடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்

*செய் தவம், தவம் செய்தால் விரும்பிய அனைத்தும் கிடைக்கும்*
*உலகில் அன்பை விட சிறந்த தவம் இல்லை, ஆதலினால்*
*அன்புடையோர் இன்புற்று வாழ்தல் இறை நியதியாகும்*

# பட்டினத்தார் பாடல்

## தாயாருக்கு தகனக்கிரியை செய்கையிற் பாடியது

### நேரிசை வெண்பா

ஐயிரண்டு திங்களா யங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
யெப்பிறப்பிற் காண்பே னினி.

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
யந்திபக லாய்ச்சிவனை யாதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
வெரியத் தழன்மூட்டுவேன்.

வட்டிலிலுந் தொட்டிலிலு மார்மேலுந் தோண்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - மிட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டுவேன்.

நொந்து சுமந்துபெற்று நோவாமலேந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - யந்திபகல்
கையிலேகொண்டென்னைக் காப்பாற்றுந்தாய் தனக்கோ
மெய்யிலே தீமூட்டுவேன்.

### வெண்பா

அரிசியோ நானிடுவே னாத்தா டனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாம - லுருசியுள்ள
தேனே யமிர்தமே செல்வமே திரவியப்பூ
மானே யெனவழைத்த வாய்க்கு.

அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேன் முகம்வைத்து முத்தாடி யென்றன்
மகனே யெனவழைத்த வாய்க்கு.

## கலி விருத்தம்

முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்
அன்னை யிட்டதீ யடிவ யிற்றிலே
யானு மிட்டதீ மூள்க மூள்கவே.

## நேரிசை வெண்பா

வேகுதே தீயதனில் வெந்துபொடி சாம்ப
லாகுதே பாவியே னையகோ - மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ வென்னை மறந்தாளோ - சந்ததமும்
உன்னையே நோக்கி யுகந்துவரங் கிடந்தென்
றன்னையே யீன்றெடுத்த தாய்.

வீற்றிருந்தா ளன்னை வீதி தனிலிருந்தாள்
நேற்றிருந்தா ளின்றுவெந்து நீறானாள் - பாற்றெளிக்க
வெல்லீரும் வாருங்க ளேதென் றிரங்காம
லெல்லாஞ் சிவமயமே யாம்.

*கடமை, பக்தி இவை இரண்டும் சமமானவை. கடமை செய்பவன் கடவுளைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. பக்தி செய்பவன் கடவுளைத் தான் பொருளாக எடுத்துக்கொள்ள வேண்டும்.*

## உடற்கூற்றுவண்ணம்

*தனதனதான தனதனதான*
*தந்தனந்தன தந்தனந்தன*
*தனனதனந்த தனனதனந்த*
*தானனதானன தானனதந்த*
*தந்ததனதான தனதானனா*

ஒருமடமாது வொருமனுமாகி யின்பசுகந்தரு
மன்புபொருந்தி யுணர்வுகலங்கி யொழுகியவிந்து
வூறுசுரோணித மீதுகலந்து

பனியிலொர்பாதி சிறுதுளிமாது பண்டியில்வந்து
புகுந்துதிரண்டு பதுமவரும்பு கபடமிதென்று
பார்வைமெய் வாய்செவி கால்கைகளென்ற

உருவமுமாகி யுயர்வளர்மாத மொன்பதுமொன்று
நிறைந்துமடந்தை யுதரமகன்று புவியில்விழுந்து
யோகமும் வாரமும் நாளுமறிந்து

மகளிர்கள்சேனை தரவணையாடை மண்படவுந்தியு
தைந்துகவிழ்ந்து மடமயில்கொங்கை யமுதமருந்தி
யோரறிவீரறி வாகிவளர்ந்து

ஒளிநகையூற விதழ்மடவாரு வந்துமுகந்திட
வந்துதவிழ்ந்து மடியிலிருந்து மழலைபொழிந்து
வாவிருபோவென நாமம்விளம்ப.

உடைமணியாடை யரைவடமாட வுண்பவர் தின்பவர்
தங்களொடுண்டு தெருவிலிருந்து புழிதியலைந்து
தேடியபாலரொ டோடிநடந்து
அஞ்சுவயதாகி விளையாடியே.

உயர்தருஞான குருவுபதேச முத்தமிழின்கலை
யுங்கரைகண்டு வளர்பிறையென்று பலரும்விளம்ப
வாழ்பதினாறு பிராயமும் வந்து

மயிர்முடி கோதி யறுபதநீல வண்டமிர் தண்டொடை
கொண்டை புனைந்து மணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர் போகதர் கூடிவணங்க

மதனசொரூப னிவனென மோக மங்கையர் கண்டு
மருண்டு திரண்டு வரிவிழி கொண்டு சுழியவெறிந்து
மாமயில் போலவர் போவது கண்டு -

மனது பொறாம லவர் பிற கோடி மங்கல செங்கல
சந்திகழ் கொங்கை மருவமயங்கி யிதழமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி -

ஒரு முதலாகி முதுபொருளாயி ருந்த தனங்களும்
வம்பிலிழந்து மதனசுகந்த விதனமிதென்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து -

வளமையுமாறி யிளமையுமாறி வன்பல் விழுந்திரு
கண்களிருண்டு வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோத குரோதமடைந்து -
செங்கையினிலோர் தடியுமாகியே.

வருவது போவ தொருமுது கூனு மந்தியெனும்படி
குந்திநடந்து மதியுமிழந்து செவிதிமிர் வந்து
வாயறியாமல் விடாமன்மொழிந்து -

துயில் வருநேர மிருமல் பொறாது தொண்டையுநெஞ்சு
முலர்ந்து வறண்டு துகிலுமிழந்து சுணையுமிழிந்து
தோகையர் பாலர்கள் கோரணிகொண்டு -

கலியுகமீதி லிவர் மரியாதை கண்டிடுமென்றவர்
சஞ்சலமிஞ்ச கலகலவென்று மலசலம்வந்து
கால்வழிமேல் வழி சார நடந்து -

தெளிவுமிராம லுரைதடுமாறி சிந்தையுநெஞ்சமு
லைந்து மருண்டு திடமுமுலைந்து மிகவுமலைந்து
தேறிநலாதர வேதென நொந்து -

மறையவன் வேத னெழுதியவாறு வந்தது கண்டமு
மென்று தெளிந்து இனியென கண்ட மினியென தொந்த
மேதினி வாழ்வுநி லாதினி நின்ற -

கடன்முறை பேசு மெனவுரை நாவு தங்கி விழுந்துகை
கொண்டு மொழிந்து கடைவழிகஞ்சி யொழுகிட வந்து
பூதமு நாலு சுவாசமு நின்று -
நெஞ்சு தடுமாறி வருநேரமே.

வளர்பிறை போல வெயிறுமுரோம முஞ்சடையுஞ்சிறு
குஞ்சியும் விஞ்ச மனதுமிருண்ட வடிவுமிலங்க
மாமலைபோல்யம தூதர்கள் வந்து -

வலைகொடு வீசி யுயிர் கொடு போக மைந்தரும் வந்து
குனிந்தழ நொந்து மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கின ரேயிவர் காலமறிந்து -

பழையவர் காணு மெனுமயலார்கள் பஞ்சுபறந்திட
நின்றவர் பந்த ரிடுமென வந்து பறையிட முந்த
வேபிணம் வேக விசாரியுமென்று -

பலரையு மேவி முதியவர் தாமி ருந்த சவங்கழு
வுஞ்சில ரென்று பணிதுகிறொங்கல் களபமணிந்து
பாவகமே செய்து நாறுமுடம்பை -

வரிசை கெடாம லெடுமென வோடி வந்திளமைந்தர்
குனிந்து சுமந்து கடுகி நடந்து சுடலையடைந்து
மானிடவாழ்வென வாழ்வென நொந்து -

விறகிடை மூடி யழல் கொடு போட வெந்து விழுந்து
முறிந்து நிணங்க ளுருகியெலும்பு கருகியடங்கி
யோர் பிடி நீறுமி லாதவுடம்பை -
நம்பு மடியேனை யினியாளுமே.



உ

ஓம் சரவணபவ

தேவார சுவாமிகள் இயற்றிய

# கந்தர் சஷ்டி கவசம்



காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கை கூடும் நிமலருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை.

குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரர் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாம மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ்செயும் மயில்வா கனானர்

கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவணபவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நாமோ நம
நிபவ சரவண நிற நிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரன் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளியையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து

நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடியதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக
மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகுகன
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என் தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க


கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுற நல்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழுது மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பாரக்கப் பாவம் பொடிபட

பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படு மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோட னைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்லறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடனி றங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தம் வலிப்பும் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்கு சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோடநீ யெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் மெனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர் காமத்துறை கதிர் வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா

சமரா புரிவாழ் சன்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சிஅு ன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவள் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய

அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க்காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப் பொடி யாக்கும்
நல்லேர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்தரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வெலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



உ
சிவமயம்

## நடராஜப்பத்து

மண்ணாதி பூதமொடு விண்ணாதியண்டம்நீ
மறைநான்கி னடிமுடியுநீ
மதியும்நீ ரவியும்நீ புனலும்நீ யனலும்நீ
மண்டலமி ரண்டேழும்நீ
பெண்ணும்நீ யாணும் பல்லுயிர்க்குயிரும்நீ
பிறவும்நீ யொருவனீயே
பேதாதி பேதம்நீ பாதாதி கேசம்நீ
பெற்றதாய் தந்தைநீயே
நண்ணுநற் பொருளும்நீ யிருளும்நீ யொளியும்நீ
நாதனாய் வந்தவனும்நீ
நவில்கின்ற கிரகங்க ளொன்பதும்நீ யிந்த
நானிலந் தந்தவனுநீ
எண்ணரிய சீவகோடிகளீன்ற வப்பனே
என்குறைக ளார்க்குரைப்பேன்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே.

மானாட மழுவாட மதியாடப் புனலாட
மங்கைசிவ காமியாட
மாலாட நூலாட மறையாடத் திரையாட
வசனமுறை பிரமனாடக்
கோனாட வானுலகு கூட்டமெல்லாமாடக்
குஞ்சர முகத்தனாடக்
குண்டல மிரண்டாடத் தண்டைபுலி யுடையாடக்
குழந்தைமுரு கேசனாடத்

தானாட வாடுசம் பந்தரிந் திரர்முனிவர்
தனியட்ட பாலராடத்
தகுதும்பை யறுகாடநந்திவா கனமாடத்
தாளநெறி மாதராட
யானாட வினையோடவெனைநாடி யிதுவேளை
யிசைவிருதொ டாடிவருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

கடலென்ற புவிமீதி லலையென்ற வுருக்கொண்டு
கனவென்ற வாழ்வைநம்பிக்
காற்றென்ற மூவாசை யாற்றொணாச் சுழலிலே
கட்டுண்டு நித்தநித்தம்
உடலென்ற கும்பிக்கு உணவென்ற விரைதேடி
யோயாம லிரவுபகலும்
உண்டுண் டுறங்குவதைக் கண்டதேயல்லாம
லொருபய னடைந்திலேனைத்
தடமென்ற விடிகரையிற் பந்தபாசங்களெனும்
தாபரம் பின்னலிட்டுத்
தாயென்று சேயென்று நீயென்று நானென்று
தமியேனை யிவ்வண்ணமாய்
இடைநின்று தடைசெய்ய வேனென்று கேளா
திருப்பதுவு மழகாகுமோ
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

வம்புசூனியமல்ல வைப்பல்ல மாரணம்
பகர்வசிய தம்பனமலப்
பாதாள வஞ்சனம் பரகாயப் பிரவேச
பண்பல்ல ஜாலமல்ல

அம்புகுண்டுகள்விலக மொழியுமந்திரமல்ல
வாகாய குளிகையல்ல
அன்போடு செய்கின்ற வாதமோடிகளல்ல
வரியமோ கனமுமல்லக்
கும்பமுனிமச்சமுனிசட்ட முனிபிரம்மரிஷி
கொங்கணர் புலிப்பாணியுங்
கோரக்கர் தனவந்தரிபோ கமுனி யிவரெல்லாங்
கூறும் வைத்தியமல்ல
எம்பரம வுன்னடியை நீங்காது நிலைநிற்கு
மிச்சையை யெனக்கருளுவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

நொந்துவந்தேனென்று பலதர முரைக்கவும்
நுழையாத தென்னமதியோ
நுட்பநெறியறியாத பிள்ளையைப் பெற்றுமதை
நோக்காத தந்தையுண்டோ
சந்ததமுந்தஞ்ச மென்றடியைப் பிடிக்கவுந்
தளராத நெஞ்சமுண்டோ
தந்திமுகன றுமுகவனிருபிள்ளை யில்லையோ
சந்ததியி லாதநீயோ
விந்தைதரு சாலங்க ளுன்னிட மிருக்குதே
வினையொன்று மறிகிலேன்
வேதமுஞ் சாஸ்திரமு முன்னையே புகழுதே
வேடிக்கையி துவல்லவோ
இந்தவுல கீரேழு மேனளித்தாய் சொல்லு
இனியுன்னை விடுவதில்லை
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

வழிகண்டு நின்னடிகள் துதியாத போதிலும்
வாஞ்சை யில்லாத போதும்
வாலாய மாய்க்கோயில் சுற்றாத போதிலும்
வஞ்சமே செய்தபோதும்
மொழியெதுகை மோனையில் லாமலே பாடினும்
மூர்க்கனேன் மூடனேனும்
மோசமே செய்யினுந் தேசமேகவரினும்
முழுக்காமியே யாயினும்
பழியெனக்கல்லவே தாய்தந்தை யர்க்கலோ
பார்த்தவர்கள் சொல்லார்களோ
பாரறிய மனைகொளப் பாதியுடலீந்தநீ
பாலனைக் காக்கொணாதோ
எழில் பெருகு மண்டலங்களிசைவா யமைத்தநீ
என்குறைகள் தீர்த்தலரிதோ
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

அன்னை தந்தையர்களெனையீன்றதற் கழுவெனோ
வறிவற்றதற் கழுவெனோ
அல்லாமல் நான்முகன் றன்னைநொந்தழுவெனோ
வாசைமூன்றுக் கழுவெனோ
முன்பிறப்பென்னவினை செய்தனென்றழுவெனோ
மூடருறவுக் கழுவெனோ
முன்னிலென் வினைவந்து மூளுமென் றழுவெனோ
முத்தியை நினைந்தழு வெனோ
தன்னைநொந் தழுவெனொ வுன்னைநொந் தழுவெனோ
தரித்திர திசைக்கழுவெனோ
தாரணியி லுன்றனருள்பெற்ற பெரியோர்களைத்
தழுவாததற் கழுவெனோ
இன்னுமெப் பிறவிவருமென் றழுவெனோவவைக
ளெல்லா முரைக்கவருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

காயாமரங்களிற் பூபிஞ் சறுத்தெனோ
கன்னியர்கள் பழிகொண்டெடனோ
கடனென்று பொருள் பறித்தேவயிறெரித்தெனோ
கடுவழியிமல் முள்ளிட்டனோ
தாயா ருடற்குள் வரவென்னவினை செய்தெனோ
தந்த பொருளிலை யென்றுநான்
தானென்ற கோபமொடு கொலைகளவு செய்தெனோ
தபசிகளை யேசினேனோ
வாயாரநின்று பலபொய் சொன்னெனோவித்து
வாமிசரைவசை சொன்னெனோ
வந்தவரை மரியாதை செய்யா தடித்தெனோ
வழக்கிலோரஞ் சொன்னேனோ
ஈயாதலோபியே யானாலுமென் பிழைகள்
எல்லாம் பொறுத்தருள்வாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

தாயாரிருந்தென்ன தந்தையுமிருந்தென்ன
தன்பிறவி யுறவுகோடி
தனமலை குவித்தென்ன கனபெயரெடுத்தென்ன
தாரணியை யாண்டுமென்ன
சேயர்களிருந்தென்ன குருவாய்த் திரிந்தென்ன
சீடர்க ளிருந்துமென்ன
சித்துபலகற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகளெல்லாம்
ஓயாது மூழ்கினும் பயனென்ன எமனோலை
ஒன்றினைத் தான்றடுக்க
வுதவுமோ விவையெலாஞ்சந்தையுறவென்றுநா
னுன்னுருபாதம் பிடித்தேன்
ஈயாதிருக்கத் தியாகராஜப்பெயரு
மிசையுமோ வேன்புனைந்தாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

இன்னமுஞ் சொல்லவோ வுன்மனங் கல்லோ
விரும்போ பெரும்பாறையோ
இருசெவியு மந்தமோ கருமபல வந்தமோ
ஏழைபங்கின னல்லவோ
என்னன்னை மோகமோ யாரிட்டசாபமோ
ஈதுனக் கழகுதானோ
இருபிள்ளை தாபமோ யார்மீதுகோபமோ
இனியுமுன்றனை விடுவெனோ
உன்னைவிட்டெங்கு சென்றாலுமுய்திடுவெனோ
உனையடுத்துங் கெடுவெனோ
ஓயாவிதென்குற்ற முன்குற்றமொன்றுமிலை
யுற்றுப்பார் பெற்றவையா
என்னையாள் பவனும்நீ யடிமைநா னாதலா
லினியரு ளளிக்க நினைவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

சனிராகு கேதுபுதன் சுக்கிரன் செவ்வாய்
குருச் சந்திரன் சூரியனிவரை
சற்றெனக் குள்ளாக்கி ராசிபன்னிரெண்டையும்
சமமாய் நிறுத்தியுடனே
பனியொத்த நஷத்திரங்களிருபத்தேழும்
பக்குவப்படுத்தி பின்னால்
பகர்கின்ற கர ணங்கள் பதினொன்றையும் வெட்டி
பலரையும் அதட்டியென்முன்
கனிபோல வேபேசி கெடுநினை நினைக்கின்ற
கசடர்களை யுங்கசக்கி
கர்த்தனின் தொண்டர்க்கு தொண்டரின்
தொண்டர்கள் தொழும்பனாக்கி
இனியவள மருவுசிறு மணவைமுனி சாமியெனை
யாள்வதினி யுன்கடன்காண்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

# கண்ணீர் அஞ்சலி



அன்னை மடியில் - 27-07-1930

ஆண்டவன் மடியில் - 12-12-2012

## திருமதி வேலுப்பிள்ளை ஞானாம்பிகை

ஈழத்தாய் பெற்றெடுத்த குலவிளக்கு மறைந்து விட்டது மாதகல் மண் காத்த குடும்ப விளக்கு அணைந்து விட்டது

டென்மார்க்கில் குடிபுகுந்த ஞான விளக்கு காற்றோடு கலந்து விட்டது கண்ணில் கடல் விழுந்து கண்ணீராய் வடிகிறதே நெஞ்சில்

நீ மறைந்து நெருப்பாகிவிட்டாயே அம்மா நேரம் என்று நீ படுத்ததில்லை நொடிப்பொழுதில்

காலன் ஏன் கவர்ந்தான் உன் உயிரை ஆலமரம் போல் நீ இருந்த

காலை வேளையில் நீ அமைதியாய் தூங்கி விட்டாயே அம்மா

பக்தியின் சரித்திரத்தை பக்குவமாய் நீ எடுத்துரைப்பாய் தாயே தேவாரத்தின் இசை மொழியை தேனாக நீ படிப்பாய் அம்மா

ஈழத்தின் உறவுகளை நீ இனிமையாக பேசி மகிழ்வாய் தாயே வீரத்தின் மகிமையை உன் முகத்தில் ஒலிக்க சொல்வாய் அம்மா

ஞானாம்பாளின் ஞானக்கண் எம் நெஞ்சில் சுடராய் எரிகின்றது விதி செய்த சதியோ அம்மா

தாய் மண்ணை விட்டு புலம் பெயர்ந்த மண்ணில் நீ அமைதியாய் தூங்கி விட்டாய் அம்மா

வேரறுந்த மரங்களாய் மறைவில்லாத பயிர்களாய் வாடிநிற்கும் உன் பாசக்குழந்தைகளை ஒரு முறை பாரம்மா

தாயின் பிரிவால் தந்தி அழும் பாசமகன்மார்கள் பாசமகள்மார்கள் கண்ணீரால் கரைகின்றனர் மாமியின் பிரிவால்

மருமகன்மார்கள் மருமகள்மார்கள் நிர்க்கதியாய் நிற்கின்றனர் அம்மா உன் பேரக்குழந்தைகள் அழும் சத்தம் கேட்கவில்லையா

உங்கள் பிரிவை நினைத்து எங்கள் உள்ளம் துடிக்குதே அம்மா கடல் கடந்து வாழ்ந்தாலும் காலத்தால் அழியாத உறவுகள்

கண்ணீர் விட்டு அழும் கோலத்தை ஒரு முறை பாரம்மா சிரித்து மகிழும் புன்னகைத் தாய் இன்று அமைதியாய் தூங்கிறதே

நீங்கள் எம்மை விட்டு பிரிந்தாலும் உங்கள் ஆத்மா சாந்தியடைய எம் கண்ணீர் பூக்களை காணிக்கைகளாக சமர்பிக்கிறோம்.

**அம்மாவின் பிரிவால் வாடும்**

**குடும்பத்தினர்**

# கண்ணீர் அஞ்சலி



நிறைந்த சிரிப்பும் திரு நீறு நிறைந்த நெற்றியும்
தளரும் வயதினிலும் தளராத துறு துறு நடையும் கொண்டு
நியுயோ நகரில் உலாவந்த எங்கள் பெரியம்மா
உலக வாழ்வதை நீத்து நீள் துயில் கொண்டதேன்...

மாதகல்மண்ணில் பிறந்து மகளாய் மனைவியாய் வாழ்ந்து
'பாலா அண்ணை' யின் அம்மாவாய் நமக்கு அறிமுகமாகி
உறவினர்க்கு மட்டுமல்ல நியுயோநகரில் பழகிய உறவுகளெல்லாம்
பாசமுடன் 'பெரியம்மா' என அழைக்கப் பரவசமும் கொண்டீர்

புத்தகங்கள் படிப்பதும் பூசைகள் செய்வதும்
பரமனவன் நாமமதை தினமும் உரைப்பதும்
தேவாரங்கள் படிப்பதுமாய் பாரினில் நீங்கள்
கொண்ட கடமைகள் முடிந்ததெனச் சென்றீரோ

அன்புத் தளைகள் களைந்து
அவனியில் தாம் கொண்ட பிணைப்புகள் நீத்து
ஆண்டவனடியே நிலையென ஓடிச்சென்றீரோ
ஆருயிர் உறவுகளை ஆழ்துயரில் ஆழ்த்திச்சென்றீரோ

நிலையிலா நீர்க்குமிழி போன்றதுதான்
இந்நீழ்நில வாழக்கை என்பது நிச்சயம்
பிறப்பில் உவகையும் இறப்பில் துயரும்
மானிட உணர்வின் இயல்பும் ஆச்சோ.....

இம்மண்ணை விட்டு நீங்கள் நீங்கினாலும் உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு நீங்காது...
உங்கள் பிரிவினால் துயருறும் உறவுகளுக்கு எம் ஆழ்ந்த அநுதாபங்களை தெரிவிக்கின்றது
டெனிஸ்-தமிழ் தோழமை ஒன்றியம்.

# நெஞ்சம் நிறைந்த நன்றி


நினைவுகளை இதயத்து தளத்தில் சுமந்தபடி எம்மை எல்லாம் ஆராத்துயரத்தில் ஆழ்த்தி இறைபதம் அடைந்த எமது தெய்வம் திருமதி ஞானாம்பாள் வேலுப்பிள்ளை அவர்களின் இறுதி நிகழ்வில் கலந்து துயரத்தில் பங்குகொண்டு ஆறுதல் தந்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள், அனைவருக்கும் இச்செய்தி கேட்டு நேரரில் பங்குகொள்ள முடியாத சூழ்நிலையில் உள்நாடு, வெளிநாடுகளிலும் துயரத்தை சுமந்து தேம்பிநிற்கும் உறவுகளுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தந்த அனைவருக்கும் காலமறிந்து சாலமும் செய்த அனைவருக்கும் துயரத்தில் இருந்போது உணவுத் தேவைகளையும் மற்றைய தேவைகளையும் தேவையறிந்து உதவிய லேடிழுசப வாழ் தமிழ் உறவுகளுக்கும் உறவுகளின் சங்கத்திற்கும் கண்ணீர் அஞ்சலிகளை தட்டச்சுப்பதிக்க உதவியவர்களுக்கும் அஞ்சலிகளை அச்சிட்டு வெளியிட்டோருக்கும் எமது தெய்வத்தின் பிரிவுச் செய்தி அறிந்து துயர்பகிர்ந்த மாதகல், வவுனியாவைச் சேர்ந்த உற்றார் உறவினர் நண்பர்களுக்கும் இன்றைய அந்தியேட்டி நிகழ்வுக் கிரியைகளில் பங்கேற்ற யாவருக்கும் இதழ்மலர சகல ஒத்துழைப்பு மல்கிய அனைவருக்கும் இம்மலரை அச்சிட்டுத்தந்த வவுனியா, பொய்கை அச்சகத்தினருக்கும் எம் இதயம் ஒன்றித்த நன்றிகள் உரித்தாக்குகின்றோம்.

நன்றியுடன்

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

# அமரர் திருமதி. ஞானாம்பாள் வேலுப்

## வாம்சாவழி



# ஞானாம்பாள் வேலுப்பிள்ளை அவர்களின் வாம்சாவழி

஁ சிதம்பரப்பிள்ளை
\+
஁ தெய்வானைப்பிள்ளை

இரத்தினம் | தில்லைநடராசா | காசிராஜா | தங்கமுத்து | விக்கினேஸ்வரன்

ஸ்வரி (ஈஸ்வரி)
\+
தவீரசிங்கம்

- வினோப்பிரியா
  \+
  கணேஷ்குமார்
  - கஜானன்
  - காருணிஜா
- நவதீசன்

மகேஸ்வரன் (மகேந்திரன்)
\+
மலர்விழி

- தர்சிகா
- தணிகா

குலராசசேகரன் (சனா)
\+
சித்திராதேவி

- தேனுசன்
- தேவகன்
- தேசாஜினி

஁ - அமரர்கள்

# கீதாசாரம்

எது நடந்ததோ
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை நீ இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்?
அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாகுவதற்கு
எதை நீ எடுத்துக்கொண்டாயோ
அது இங்கேயே எடுக்கப்பட்டது
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்

இந்த மாற்றம் உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

